# <u>திருவேற்காடு நகராட்சி</u>
## <u>நகர்மன்ற அவசரக் கூட்டம்</u>

**2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் நாள் வியாழக்கிழமை மாலை 05.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

**நாள்: 19.12.2019**

---

### <u>பொருள் எண். 1</u>

திருவேற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பொது சுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் இலகுரக வாகனம் பதிவு எண்.TN 12 U 1072 (Tata Ace) வாகனத்தில் முன்பக்க சக்கரத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளான, கீரின் பேக்கிங், ஆயில், பேரிங் மற்றும் பிரேக் பேட் ஆகியவை பழுதாகி உள்ளது. மேற்படி பழுதுகள் சீர் செய்ய பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ.10000/–க்கு பொது நிதியின் கீழ் செலவினங்கள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.922** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

### <u>பொருள் எண். 2</u>

திருவேற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் JCB வாகன பதிவு எண்.TN 12 J 6859 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டு வாகனத்தினை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட வாகன பணியின் அவசர அவசியத்தினை கருதி வாகனத்தில் உள்ள பழுதுகளை சீர் செய்ய உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.923** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

### <u>பொருள் எண். 3</u>

திருவேற்காடு நகராட்சி எதிர்வரவுள்ள நகர்புற உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கும் பொருட்டு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கு தேவையான அறிக்கைகளை உடனுக்குடன் அனுப்பிடவும், நகல் எடுக்கவும் மற்றும் அன்றாட நிர்வாக மேலாண்மை பணிகளுக்கு தேவையான பிரின்டர்கள், கணினிகள் போன்ற கீழ்க்கண்ட இதர பொருட்கள் தேவைப்படுதாலும், தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் சில கணினிகள் மற்றும் பிரின்டர்கள் பழுதடைந்து சீர் செய்யும் பயன்பாட்டிற்கு இயக்க இயலாத காரணத்தினால், கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ள பொருட்கள் வாங்கி கொள்ள அதற்கான தோராய மதிப்பு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **1.** | கணினி ( I5 Computer) | 3 |
| **2.** | Laptop | 1 |
| **3.** | Printer (Front and Back Model) | 3 |
| **4.** | Xerox Machine (BIG) | 1 |
| **5.** | **Public Awarness (Amplifier)** | 1 |

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பொருள்களின் அவசியத்தினை கருதி அரசு அனுமதிக்கப்பட்ட (DGS&G) விலையில் வாங்கி கொள்ளவும், அதற்கான மதிப்பீடுகளுக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.924 நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ, ஆ, இ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு பணிக்காக நகராட்சி சொந்தமான கைவிடப்பட்ட ஆழ்துளை குழாய் கிணறுகள், பூங்காக்கள் மற்றும் இதர இடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் அமைக்கப்படவேண்டியுள்ளதால், மேற்கண்ட பணியின் அவசியத்தினை கருதி அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.925 நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 5

இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டேங்கர் லாரி மற்றும் பொலிரோ வாகனங்களின் வருடாந்திர காப்பீடு (Insurance) 28.12.2019–வுடன் முடிவு பெறுவதால், மேற்படி வாகனத்திற்கு ஒரு வருட காலத்திற்கு காப்பீடு புதுப்பித்தல் செய்திடவும், அதற்காக The New India Assurance Compaly Ltd., நிறுவனத்தாரிடமிருந்து கீழ்க்கண்டவாறு கேட்பு வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்** | **வாகன பதிவு எண்.** | **வாகனத்தின் தன்மை** | **வருடாந்திர காப்பீடு முடிவுறும் நாள்** | **அடுத்த ஒரு வருடத்திற்கு புதுப்பிக்க வரப்பெற்ற கேட்பு தொகை (ரூ.)** |
|---|---|---|---|---|
| 1. | TN 20 AJ 7480 | ஈப்பு வாகனம் | 28.12.2019 | 12272.00 |
| 2. | TN 20 D 8685 | குடிநீர் டேங்கர் லாரி | 28.12.2019 | 37549.00 |
| | **மொத்தம்** | | | **49821.00** |

மேற்கண்ட வாகனப் பணியின் அவசியத்தினை கருதி மேற்படி நிறுவனத்திற்கு வருடாந்திர காப்பீடு தொகை ரூ.49821/–யினை பொது நிதியின் கீழ் செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி வாகனத்தின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்திடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.926 நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ, ஆ, இ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 6

இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8 நூம்பல் ஏரிக்கரை தெருவில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பழுதடைந்த திறந்தவெளி கிணறு மற்றும் உபயோகமற்ற நிலையில் பழுதடைந்துள்ள சிறிய மேல்நிலை நீர்தேக்க தொட்டியும் அமைந்தள்ளது. மேற்படி திறந்தவெளி கிணறு மற்றும் சிறிய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மிகவும் சேதமடைந்த நிலையில் பொது மக்களுக்கு இடையூறாராகவும் உள்ளது. எனவே, மேற்கண்ட பாழடைந்து இருக்கும் சிறிய மேல்நிலை நீர்தேக்க தொட்டி இடித்து அப்புறப்படுத்தவும், திறந்தவெளி கிணற்றினை முடிடவும், நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்திடவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.927** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 7

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 9 எண்ணிக்கை நிகழ்விட உரக்குடில் (Onsite Compost Centre) பணிகள் முடிக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும், அந்த உரக்குடில்களில் சில மேம்பாட்டு பணிகள் செய்ய வேண்டியுள்ளதால், மேற்படி அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.928** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 8

மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களின் ந.க.எண். /செமதொஅ/2019, நாள். .07.2018–ன் கடிதத்தின்படி மாலை தமிழகம் தினசரி நாளிதழில் தமிழகம் அடைந்துள்ள வளர்ச்சி பற்றிய விபரங்கள் குறித்த தொழில் மலர் 2019 வெளியிடவுள்ளதாகவும் அத்தொழில் சிறப்பு மலரில் நகராட்சியின் சார்பாக மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் குறித்து விளம்பரம் வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டப்பணிகள் குறித்து தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு மேற்படி கீழ் குறிப்பிட்டுள்ள பத்திரிகை நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | M/s.Maalai Tamizhagam, No.3, 5th Street, Avvai Thiru Nagar, Virugambakkam, Chennai- 600092. | தமிழகம் அடைந்துள்ள வளர்ச்சி பற்றிய விபரங்கள் குறித்த தொழில் மலர் 2019 வெளியிடுதல். | MT-2180/2019-20 20.11.2019 | 14,700/– |
| | | | **மொத்தம்** | **14,700/–** |

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மேலும், மேற்படி பணியின் அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**ஆ)** மேலும், மேற்படி செலவினத்திற்கான தொகையினை பொது நிதியின் கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.929** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ. ஏற்கப்படுகிறது.**
**ஆ. அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 9

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.6ல் உள்ள வடநூம்பல் பிரதான சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ சரஸ்வதி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் வார்டு எண்.14ல் பாரதி நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள ஸ்ரீதேவி கருமாரியம்மன் தேவஸ்தான ஜீவரத்தினம்மாள் மேல்நிலைப்பள்ளியும் இயங்கி வருகிறது. அதனை தொடர்ந்து, மேற்படி இரண்டு பள்ளிகள் அமைந்துள்ள சாலை முக்கிய பிரதான சாலைகள் என்பதால் குழந்தைகள், பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொது மக்கள் அதிகம் கடந்து செல்வதால் போக்குவரத்தினால் மிகவும் இடையூறாகவும், விபத்துகள் அதிகம் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, மேற்கண்ட சாலையினை பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி மேற்படி சாலைகளில் வேகத்தடையினை (ஆறு எண்ணிக்கை) அமைத்தும் மற்றும் அடையாள பலகை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.930** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 10

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அரசு திட்டத்தின் மூலம் வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்க, குடிநீர் விநியோக வரைவு துணை விதிகள் வைப்பு தொகை மற்றும் கட்டண விவரங்களை அறிவிப்பு கடிதத்தினை அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை மூலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்குண்டான பட்டியல் M/s.Bright Advertising, No.13, Moores Road, Moores Garden, Thousand Light, Chennai-600006. என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | M/s.Bright Advertising, No.13, Moores Road, Moores Garden, Thousand Light, Chennai-600006 | குடிநீர் விநியோக வரைவு துணை விதிகள் வைப்பு தொகை மற்றும் கட்டண விவரங்களை | 7787<br>26.11.2019 | 53,566.00 |
| | | | **மொத்தம்** | **53,566.00** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.931** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 11

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2019–20–ன் (Phase-II) கீழ் இந்நகராட்சி பகுதிகளில் அடிப்படை வசதி பணிகளான

தார்சாலை பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு கடிதத்தினை அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை மூலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்குண்டான பட்டியல் **M/s.Accord Advertising Agencies, Suite 1&2, 8th Floor, Jhaver Plaza, 1-A, Mahatma Gandhi Road, Nungambakkam, Chennai-34** என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | M/s.Accord Advertising Agencies, Suite 1&2, 8th Floor, Jhaver Plaza, 1-A, Mahatma Gandhi Road, Nungambakkam, Chennai-34 | இந்நகராட்சி பகுதிகளில் அடிப்படை வசதி பணிகளான தார்சாலை பணிகளை மேற்கொள்ளுதல் (TURIP Phase-II) | AAA/0483/19-20<br>16-11-2019 | 90,563.00 |
| | | | **மொத்தம்** | **90,563.00** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.932 நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 12

தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019-20ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட செட்டி தெரு பிரதான சாலை, கருமாரியம்மன் நகர் பிரதான சாலை, கோலடி பிரதான சாலைகளை அகலப்படுத்தி தார்தளம் அமைத்தல், எட்டீஸ்வரன் கோயில் தெரு மற்றும் யாகவ மங்கள் ராஜ் தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல் **(சிப்பம்–1ன் கீழ்)** ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1. | **M/s.Apex Civil Engineering,**<br>No.20A, Reddy Street, Virugampakkam, Chennai - 600 092. |
| 2. | **M/s.Jupiter & Co,**<br>No.110, C-1, Gangai Apartment,<br>Sathya Garden, Saligram, Chennai - 600 093. |
| 3. | **M/s.Mars Constrction,**<br>HIG – 2253, TNHB, Avadi, Chennai – 600 054 |
| 4. | **M/s.Shanmugavel Construction,**<br>No.140, Kamakotti Street, Periyar Nagar, Kancheepuram. |

மேற்படி பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்ததில் வரிசை எண்.3 மற்றும் 4ல் குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தேர்வு பெறவில்லை.

மேலும், வரிசை எண்.1 மற்றும் 2ல் உள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு மேற்கொண்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி தேர்வு பெற்றதையடுத்து ஒப்பந்ததாரர்களின் விலை உறை (Price Bid) திறக்கப்பட்டு மதிப்பீட்டு தொகையுடன் ஒப்புநோக்கப்பட்டதின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்த விலை விகிதம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | **M/s.Apex Civil Engineering,**<br>No.20A, Reddy Street, Virugampakkam, Chennai - 600 092. | 200.00 | மதிப்பீட்டை விட<br>4.94 % அதிகம் L1 |
| 2. | **M/s.Jupiter & Co,**<br>No.110, C-1, Gangai Apartment, Sathya Garden, Saligram, Chennai - 600 093. | | மதிப்பீட்டை விட<br>11.66 % அதிகம் L2 |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள L1 ஒப்பந்ததாரர் **M/s.Apex Civil Engineering** நிறுவனத்தார் மதிப்பீட்டு தொகையை விட 4.94 % கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்ததை தொடர்ந்து, நகராட்சி மூலம் விலைகுறைப்பு செய்து தர கோரியதில் ஒப்பந்ததாரர் தற்போதைய கட்டுமான பொருட்களின் சந்தை விலை, இதர விலைவாசி உயர்வு மற்றும் தொழிலாளர்களின் உள்ளூர் தினக்கூலி ஆகியவை அதிகமாக உள்ள காரணத்தால் விலைக்குறைவு செய்து தர இயலாது என கடிதம் வழங்கியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :-</u>**

அ) மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடிக்க வேண்டியுள்ளதாலும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த **M/s.Apex Civil Engineering** (L1 ஒப்பந்ததாரர்) நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி எண்.**2.7.2.**ன்படி நகர்மன்ற அதிகார வரம்பிற்குட்பட்டு **4.94** % மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.2,00,00,000/-ஐ விட கூடுதலாகும் செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.933 நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

**<u>பொருள் எண். 13</u>**

தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் **2019-20**ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அம்பாள் நகர் பிரதான சாலை, சூரியநாராயணன் நகர், காடுவெட்டி பிள்ளையார் கோயில் தெரு, செல்லியம்மன் நகர், ராம் நகர், TTS நகர், பெரியகோலடி, விக்னேஷ் நகர், எஸ்(அன்)பி குடியிருப்பு, பாரதியார் 2வது தெரு மற்றும் ஆச்சி தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல் பணிக்கு **(சிப்பம்–2ன் கீழ்)** ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு மேற்கொண்டதின் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி தேர்வு பெற்றதையடுத்து ஒப்பந்ததாரர்களின் விலை உறை (Price Bid) திறக்கப்பட்டு மதிப்பீட்டு தொகையுடன் ஒப்புநோக்கப்பட்டதின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்த விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | **Thiru.B.Loganathan,**<br>No.1/85, School Street, Arumbakkam Village, Mannavedu Post, Tiruvallur-602021 | 200.00 | மதிப்பீட்டை விட<br>4.80 % அதிகம்<br>L1 |
| 2. | **Thiru.P.Saravanan,**<br>No.2/176, Chennai Salai, Thiruthani-631209. | | மதிப்பீட்டை விட<br>8.06 % அதிகம்<br>L2 |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள L1 ஒப்பந்ததாரர் **Thiru.B.Loganathan** அவர்கள் மதிப்பீட்டு தொகையை விட 4.80 % கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்ததை தொடர்ந்து, நகராட்சி மூலம் விலைகுறைப்பு செய்து தர கோரியதில் ஒப்பந்ததாரர் தற்போதைய கட்டுமான பொருட்களின் சந்தை விலை, இதர விலைவாசி உயர்வு மற்றும் தொழிலாளர்களின் உள்ளூர் தினக்கூலி ஆகியவை

அதிகமாக உள்ள காரணத்தால் விலைக்குறைவு செய்து தர இயலாது என கடிதம் வழங்கியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

அ) மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடிக்க வேண்டியுள்ளதாலும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த **Thiru.B.Loganathan** அவர்கள் (L1 ஒப்பந்ததாரர்) ஒப்பந்தப்புள்ளியினை தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி எண்.2.7.2.ன்படி நகர்மன்ற அதிகார வரம்பிற்குட்பட்டு 4.80 % மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ)மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.2,00,00,000/-ஐ விட கூடுதலாகும் செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.934 நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 14

தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019-20ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட விஜய் நகர் பிரதான சாலை, விஜய் நகர் 1வது தெரு, 2வது தெரு, 3வது குறுக்கு தெரு, 5வது குறுக்கு தெரு, 7வது குறுக்கு தெரு, பி.கே.எம் சாலை, கலைஞர் கருணாநிதி தெரு, ஸ்ரீ கிருஷ்ணா நகர் பிரதான சாலை, 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, 4வது தெரு, 5வது தெரு, 6வது தெரு, ஜெய் நகர் செல்லம்மாள் தெரு, பாலாஜி நகர் 1வது தெரு, 1வது குறுக்கு தெரு, பாலாஜி நகர் 2வது தெரு, எம்.ஜி.ஆர் நகர் பிரதான சாலை, புறநகர், சண்முகா நகர் 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, காமராஜ் தெரு 1வது குறுக்கு தெரு, அம்மன் நகர் பிரதான சாலை, அம்மன் நகர் 1வது தெரு மற்றும் 3வது தெருக்களுக்கு தார்தளம் புதுப்பித்தல் பணிக்கு **(சிப்பம்–3ன் கீழ்)** ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு மேற்கொண்டத்தின் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி தேர்வு பெற்றதையடுத்து ஒப்பந்ததாரர்களின் விலை உறை (Price Bid) திறக்கப்பட்டு மதிப்பீட்டு தொகையுடன் ஒப்புநோக்கப்பட்டதின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்த விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | **Thiru.U.R.Subramanian,**<br>No.10, Vinayakapuram Main Road,<br>Ambattur, Chennai – 600 053 | 200.00 | மதிப்பீட்டை விட 4.89 % அதிகம் L1 |
| 2. | **Thiru.P.Chandran,**<br>No.27, Annai Therasa Street,<br>Golden Gorge Nagar,<br>Nerkundaram, Chennai – 600 107. | | மதிப்பீட்டை விட 6.25 % அதிகம் L2 |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள L1 ஒப்பந்ததாரர் **Thiru.U.R.Subramanian** அவர்கள் மதிப்பீட்டு தொகையை விட 4.89 % கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்ததை தொடர்ந்து, நகராட்சி மூலம் விலைகுறைப்பு செய்து தர கோரியதில் ஒப்பந்ததாரர் தற்போதைய கட்டுமான பொருட்களின் சந்தை விலை, இதர விலைவாசி உயர்வு மற்றும் தொழிலாளர்களின் உள்ளூர் தினக்கூலி ஆகியவை அதிகமாக உள்ள காரணத்தால் விலைக்குறைவு செய்து தர இயலாது என கடிதம் வழங்கியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

அ) மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடிக்க வேண்டியுள்ளதாலும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த **Thiru.U.R.Subramanian** அவர்கள் (L1 ஒப்பந்ததாரர்) ஒப்பந்தப்புள்ளியினை தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி எண்.2.7.2.ன்படி நகர்மன்ற அதிகார

வரம்பிற்குட்பட்டு 4.89 % மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
ஆ)மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.2,00,00,000/-ஐ விட கூடுதலாகும் செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.935 நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 15

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்பத்தூர் அவர்களின் கடித ந.க.எண்.648/2019/அ2, நாள்.27.11.2019–ன்படி கீழ்க்கண்டவாறு ஆண்டு சந்தா தொகையினை செலுத்த கோரப்பட்டுள்ளது.

| சந்தா தொகை செலுத்த வேண்டிய ஆண்டு | செலுத்த வேண்டிய ஆண்டு சந்தா தொகை (ரூ.) |
|---|---|
| 2018–19 | 90000.00 |
| 2019–20 | 90000.00 |
| **மொத்தம்** | **180000.00** |

மேற்படிய ஆண்டுகளுக்கு ஆண்டு சந்தா தொகை ரூ.1,80,000/–ஐ செலுத்திடவும் இதற்கான செலவீனத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.8087/2019/சி1)

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.936 நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 16

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சென்னை பெருநகர வளர்ச்சி குழும திறந்தவெளி ஒதுக்கீடு கட்டண நிதி மற்றும் பொது நிதி 2019–2020ன் கீழ் கீழ்க்கண்ட பூங்கா மேம்பாட்டு பணிகள் மற்றும் அப்படை வசதிப்பணிகளை மேற்கொள்ள 05.12.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 8 | சுசையா நகர் பூங்காவிற்கு நடைபாதை, விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை விளக்குகள், இருக்கைகள் மற்றும் குடிநீர் பணிகள் செய்தல். | 18.00 | M/s.Vivek Construction<br><br>M/s.SP Builders | 4.94 % மதிப்பீட்டை விட அதிகம்<br><br>5.90 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி அளிக்கலாம்.
**ஆ)** மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத்தினை மேற்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழும திறந்தவெளி ஒதுக்கீடு கட்டண நிதியின் கீழ் ஈடு செய்யவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.937 நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## <u>பொருள் எண். 17</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதியின் கீழ் கீழ்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 3 | கீழ்அயனம்பாக்கம் கீசன் நகர் 1வது தெரு பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 8.70 |
| 2. | 3 | கீழ்அயனம்பாக்கம் வெள்ளாளர் தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 9.90 |
| 3. | 8 | சூசையா நகர் குறுக்கு தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 7.30 |
| 4. | 9 | புளியம்பேடு பிள்ளையார் கோயில் தெரு மற்றும் குறுக்கு தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல். | 9.00 |
| 5. | 15 | அபிராமி நகர் 1வது தெரு மற்றும் 2வது தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 9.70 |
| 6. | – | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பருவமழையினால் சேதமடைந்த சாலைகளை தற்காலிகமாக செப்பனிடுதல். | 9.90 |

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.938** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## <u>பொருள் எண். 18</u>

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. அவ்வாறு சேகரம் செய்யப்படும் மக்கும் மற்றும் மக்காத தன்மை கொண்டவை என தரம் பிரிக்கப்படுகிறது. மேலும் சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் தன்மை கொண்டவைகளை நேரடியாக முதல் நிலை சேகரிப்பு நிலையிலேயே இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரக்குடில்களில் துர்நாற்றம் வீசாமல் இருக்கவும், தொற்று நோய்கள் பரவாமல் இருக்கவும் மேலும் பொதுக் கழிப்பறைகளில் துர்நாற்றம் வீசாமல் தடுக்கவும் LEMON CROSS, எனும் கிருமி நாசினியை அக்குப்பைகளில் தெளிக்க தேவையான அளவில் வாங்கி உபயோகப்படுத்தவும் இதற்கான தோராய செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கும் மேற்படி லெமன்கிராஸ் நாசினியை ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கிக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது நிதியின் கீழ் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.939** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## <u>பொருள் எண். 19</u>

திருவேற்காடு நகராட்சி **09.08.2010** முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு **28.50** சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். **2011**ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி **62289**, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி **89167** குடியிருப்புகளின் எண்ணிக்கை **22291** ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு **28.82** மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. மேலும் இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வண்டி மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. அவ்வாறு பயன்படுத்தப்படும் BOV வாகனகளில் ஏற்படும் பழுது நீக்கம் மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும்

இதற்கான செலவீனம் ரூ..5.00 இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.940 நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 20

இந்நகராட்சியில் உள்ள பொது சுகாதார வாகனங்களுக்கு தகுதி சான்று பெற வாகனம் எண். TN-12-U-1072, TN-12-U-1038, TN-12-J-8957 மற்றும் டிப்பர் லாரி TN-12-V-7786 ஆகியவாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதலுக்கும்.'

| வ. எண் | ஒப்பந்தாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | வாகனம் எண்.TN-12-U-1072 | வாகனம் எண்.TN-12-U-1038 | வாகனம் எண்.TN-12-J-8957 | வாகனம் எண்.TN-12-V-7786 |
|---|---|---|---|---|---|---|
| 1 | சிவசக்தி பாடி ஒர்க்ஸ் எண்.9, ஏரிக்கரை தெரு, பிடாரிதாங்கள் சென்னை – 56. | பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு வருடாந்திர தகுதி சான்று பெற வேண்டி வாகனங்களின் ஏற்பட்டுள்ள பழுதுகள் சீர்செய்தல். | 1,56,100/– | 1,57,600/– | 1,67,100/– | 1,90,400/– |
| 2 | A.R.V. பாடி பில்டர்ஸ் 207, பாரிவாக்கம் மெயின் ரோடு, பூந்தமல்லி – 56. | | 1,60,500/– | 1,61,300/– | 1,76,000/– | 1,94,000/– |
| 3 | ஜெயசக்தி பாடி ஒர்க்ஸ், எண்.1/1A, தண்டுரை மெயின் ரோடு, தோட்டம், பூந்தமல்லி – 56. | | 1,64,500/– | 1,64,900/– | 1,80,900/– | 1,99,000/– |

**அலுவலக குறிப்பு:—**

மேற்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனமான சிவசக்திபாடி ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.941 நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 21

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. ஏற்கனவே, இந்நகராட்சியில் 9 இலகுரகு வாகனங்களும் 33, பேட்டரி வாகனங்களும் வீடுவீடாக சென்று குப்பை சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ள வாங்கி பயன்ப்படுத்தப்பட்டு வருகிறது. திருவேற்காடு நகராட்சியில் பிரசித்த பெற்ற தேவி ஸ்ரீ கருமாரியம்மன் கோவில் உள்ளதால், பக்தர்கள் பொது மக்கள் வருகை அதிகமாக உள்ளதாலும் வளர்ந்து வரும் நகரமாதலால், குடியிருப்புகளின் எண்ணிக்கை பெருகி வருவதாலும், ஏற்கனவே உள்ள வாகனங்கள் போதுமானதாக இல்லை என்பதால், மேலும் கூடுதலாக 5 பேட்டரி வாகனங்கள் கொள்முதல்

செய்யவும், அதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதற்கென ஆகும் தோரய செலவினம் ரூ.9.90/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.942** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 22

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. டெங்கு காய்ச்சல், பன்றிக்காய்ச்சல் மற்றும் சிக்குன்குனியா போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க பொது மக்களிடயே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் (IEC) கொசு ஒழிப்பு வாசகங்கள் பதித்த ஸ்டிக்கர்கள் 13000 மற்றும் 52 வார ஸ்டிக்கர்கள் 13000 அச்சடித்து சப்ளை செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | மல்டி கலர் 52 வாரக் கணக்கெடுப்பு ஸ்டிக்கர் 13000 எண்ணிக்கை | டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு அறிவிப்பு நோட்டீஸ் 13000 எண்ணிக்கை | பணி செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதாரம் டெங்கு காய்ச்சல், நோய்கள் பரவாமல் தடுக்க பொது மக்களிடயே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் (IEC) கொசு ஒழிப்பு வாசகங்கள் பதித்த ஸ்டிக்கர்கள் மற்றும் 52 வராஸ்டிக்கர்கள் அச்சடித்து சப்ளை செய்தல் | திருநெல்வேலி மாவட்ட மல்டி பர்போஸ் சர்வீஸ் தொழிற் பேட்டை கூட்டுறவு நிறுவனம் லிமிடெட். | 195000/–<br>GST – 35100/– | 195000/–<br>GST – 35100/– | 15 நாட்கள் |
| | | கோவில்ப்பட்டி சிறிய ஸ்கேல் தொழிற் சர்வீஸ் தொழிற் கூட்டுறவு லிமிடெட் தூத்துகுடி. | 202800/–<br>GST – 36504/– | 202800/–<br>GST – 36504/– | |
| | | தூத்துகுடி மாவட்ட ஹைடெக் பிரிண்டிங் & அலெய்டு சர்வீஸ் தொழிற் கூட்டுறவு நிறுவனம் லிமிடெட். | 200200/–<br>GST – 36036/– | 200200/–<br>GST – 36036/– | |

**அலுவலக குறிப்பு:–**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய வரிசை 1ல் கண்டுள்ள திருநெல்வேலி மாவட்ட மல்டி பர்போஸ் சர்வீஸ் தொழிற்பேட்டை கூட்டுறவு நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.943** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 23

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி 28.82 மெட்ரிக்டன் அளவு குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. மேலும் இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் BOV மூலம் மற்றும் மூன்று சக்கர வண்டி Tricycle மூலமும், மேலும் இந்நகராட்சியில் 9 இலகுரக வாகனம் மூலம்

குப்பைகள் பசுமை உரகுடில்களுக்கு கொண்டு செல்ல காலதாமதமாகுகிறது. மேலும் குடியிருப்பாளர்கள் தத்தம் வீடுகளில் சேகரம் செய்யப்படும் குப்பைகளை நகராட்சி பணியாளரிடம் ஒப்படைக்க காலதாமதமாகுகிறது. இதனால் அனைத்து வீடுகளிலும் குப்பைகள் சேகரம் செய்வதில் இயலாமல் போகிறது. இதனை தடுக்கும் பொருட்டு நகராட்சியில் உள்ள 9 இலகுரக வாகனங்களில் மைக்செட், ஆம்ளிபையர் ஒளி பெருகி சாதனம், பொருத்தவும், அதற்கான விளம்பர பென்டிரைவ் தயாரிக்கவும் மேற்படி சாதனங்களை ஆண்டு பராமரிப்பை மேற்கொள்ளவும் உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து, விலைப்புள்ளி கோரி பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.944** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

**<u>பொருள் எண். 24</u>**

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரப் பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டு குடியிருப்புகளில் தினசரி விடுதலின்றி குப்பைகள் சேகரம் செய்து முதல் நிலையிலேயே பசுமை உரக்குடிலில் எடுத்து செல்ல நகாட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பல்வேறு டெங்கு நோய் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதை தொடந்து நகராட்சியில் பொது சுகாதார பணிக்காக இலகுரக வாகனங்களில் பெரியவகை பின்கள் வைத்து குப்பைகளை தனித்தனியாக சேகரம் செய்யவும் மற்றும் பசுமை உரக்குடியலில் சேகரிக்கப்படும் குப்பைகள் தனிதனியாக சிறியவகை பின்களில் சேகரம் செய்யவும் மற்றும் பசுமை உரக்குடிலில் சுத்தமாகவும் சுகாதார முறையில் கையாளவும் 30 எண்ணிக்கையில் பெரியவகை பின்களும் 200 எண்ணிக்கையில் சிறியவகை பின்களும் கொள்முதல் செய்யவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதற்கென ஆகும் தோராய செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.945** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

**<u>பொருள் எண். 25</u>**

திருவேற்காடு நகராட்சி பகுதியில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் தற்போது நகராட்சி பகுதியில் காய்ச்சல் நோய் வேகமாக பரவும் காலநிலை உள்ளதாலும், வாகனம் மூலம் புகை போக்கி இயந்திரம் பொருத்தப்பட்டு நகர் பகுதியில் கொசு ஒழிப்பு புகை மருந்து தெளிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் காய்ச்சல் நோய் பாதித்த குடியிருப்புதாரர்களின் வீட்டிற்குள் சென்று சுற்றுப்புறங்களில் கொசு ஒழிப்பு புகைமருந்து தெளிக்க இயலாததாலும், மேலும் முதிர்ந்த கொசுக்களை அழிக்கவும், கட்டுப்படுத்தவும் பெரிய இயந்திரங்கள் பயன்படுத்த இயலாத நிலைஉள்ளதாலும் சிறியவகை புகை போக்கி மிஷின் (Mini Fogging Machine) 1 லிட்டர் கொள்ளளவு கொண்ட 8 எண்ணிக்கை, பெரிய வகை புகைபோக்கி மிஷின் 1 எண்ணிக்கை, மற்றும் Pulse Fogging Machine 1 எண்ணிக்கை, மேலும் சிறிய வகை இயந்திரத்திற்கு தேவையான அதற்கான பயன்படும் 500 சிலிண்டர்களையும் கொள்முதல் செய்யவும் இதற்கென ஆகும் தோராய செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது நிதியின் கீழ் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.946** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அ. அனுமதிக்கப்படுகிறது.**

**ஆ. அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 26

இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரக்குடிலில் சேகரம் செய்யப்படும் குப்பைகளில் மக்கும் தன்மை கொண்ட குப்பைகளில் உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் போரா கோணி பைகளில் அடைத்து தனியார் நிறுவனங்ளுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இதனை தொடர்ந்து பசுமை உரகுடிலில் துர்நாற்றம் வீசாமல் இருக்க ''லெமன் கிராஸ் '' என்னும் கிருமி நாசினி தெளிக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண் | ஒப்பந்தாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலாஜி மார்கெட்டில் எக்ஸ்போர்டர் மற்றும் டிஸ்ட்ரிபியூட்டர். எண்.9–5–1, பாலாஜி அய்யம்பாளையம், திண்டுக்கல் மாவட்டம். | பொது சுகாதாரம் டெங்கு, காலரா, சிக்கன் குனியா போன்ற தொற்று நோய்க்ள் தடுப்பு நடவடிக்கைகாக லெமன் கிராஸ் 300 லிட்டர் சப்ளை செய்தல் பணி. | ரூ.2650/– (1 லிட்டர்) |
| 2 | ஸ்ரீ விநாயகா பார்மா எண்.33, வெங்கட்டபணார் தெரு, பொள்ளாச்சி, கோயம்புத்தூர். | | ரூ.2950/– (1 லிட்டர்) |

**அலுவலக குறிப்பு:–**

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங் எக்ஸ்போர்டர் மற்றும் டிஸ்டிரிபூயுட்டர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.947** **நாள்.19.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

**தனிஅலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி**

## திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

**2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

நகராட்சி அலுவலகம்,
திருவேற்காடு
நாள்: 31.12.2019

தனி அலுவலர் (ம) ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி.

### பொருள் எண். 1

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் மற்றும் டிசம்பர் 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.948** **நாள்.31.12.2019**

**தீர்மானம் : பதியப்படுகிறது.**

---

### பொருள் எண். 2

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான நவம்பர் மற்றும் டிசம்பர் 2019 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.949** **நாள்.31.12.2019**

**தீர்மானம் : பதியப்படுகிறது.**

---

### பொருள் எண். 3

இந்நகராட்சியில் நவம்பர் மற்றும் டிசம்பர் 2019ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.950** **நாள்.31.12.2019**

**தீர்மானம் : பதியப்படுகிறது.**

---

### பொருள் எண்.4

இந்நகராட்சியில் பொது நிதி 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | 16 | காடுவெட்டி பசுமை உரக்குடிலுக்கு கூடுதல் வசதி பணிகள் மேற்கொள்ளுதல். | 2.40 |
| 2. | 18 | கோலடி நவீன எரிவாயு தகன மையத்தில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல். | 3.20 |
| 3. | 4 | கீழ்அயனம்பாக்கம் பகுதிக்கு (HDPE Tank) குடிநீர் தண்ணீர் தொட்டிகள் அமைத்தல். | 2.00 |

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.951** **நாள்.31.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.5

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2018–19–ன் கீழ் வார்டு எண்.11–ல் மாதிராவேடு பகுதிக்கு குடிநீர் மேல்நிலை தொட்டி அமைக்கும் பணியினை மேற்கொள்ள திரு.கா.சு.ஜனார்த்தனம், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து, மேற்கண்ட பணியினை ஒப்பந்ததாரர் இதுநாள் வரையில் துவங்காமல் உள்ளதால், திட்டப்பணியின் அவசியத்தினை கருதி ஒப்பந்ததாரருக்கு அறிவுப்பு கடிதங்கள் வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்கண்ட அறிவிப்புகள் வழங்கப்பட்டு, ஒப்பந்ததரர் பணியினை துவங்காமல் துவக்க நிலையிலேயே உள்ளதால், ஒப்பந்ததாரருக்கு இறுதி அறிவிப்பு (Show Casue Notice) பணியினை ரத்து செய்யப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட திட்டப் பணியின் அவசியத்தினை கருதி மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு பல அறிவிப்புகள் வழங்கப்பட்ட நிலையில் பணியினை துவங்காமல் உள்ளதால், மேற்கண்ட ஒப்பந்தத்தினை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.952** **நாள்.31.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.6

திருவேற்காடு நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களில் ஒன்றான வாகன நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமை கடந்த 2017–2018 முதல் 2019–2020 வரை திரு.K.ஆனந்த் S/o. கமலகண்ணன், 25, பாரதி தெரு, ஈஸ்வரன் கோவில் தோட்டம், ஆவடி அவர்களுக்கு (01.02.2017 முதல் 31.01.2020) மூன்றாண்டிற்கு குத்தகை விடப்பட்டது. தற்போது மேற்படி குத்தகை இனம் எதிர் வரும் ஜனவரி 2020–ல் (31.01.2020) குத்தகை உரிமை காலம் முடிவடைய உள்ளதால், விதிகளின்படி மீண்டும் மூன்றாண்டிற்கு 01.02.2020 முதல் 31.01.2023 வரை மேற்படி இனத்திற்கான குத்தகை உரிமம் வழங்கிட ஏலம் /ஒப்பந்தபுள்ளிகள் கோரவும், நகராட்சி ஆணையரால் ஏற்படுத்தப்படும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிக்கான பொது மற்றும் ஏலக் கட்டுப்பாடு சிறப்பு நிபந்தினைகளின் படி நடவடிக்கை மேற்கொண்டு செயல்படுத்தவும் மேலும் ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழ்களில் வெளியிடவும் இதற்கான செலவினங்களை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1406/2013/அ1)

**நகர்மன்ற தீர்மான எண்.953** **நாள்.31.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.7

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அருள்மிகு ஸ்ரீதேவி கருமாரியம்மன் மற்றும் ஸ்ரீவேதபுரிஸ்வரர் திருக்கோயில்கள் அமைந்துள்ளது. எதிர்வரும் 2020 வருட ஆங்கில புத்தாண்டு தினத்தில் சுமார் பல்லாயிரகணக்கான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் திருக்கோயில்களுக்கு வந்து செல்வதால் அவர்களுக்கு போதிய சுகாதார வசதிகளை அமைத்து தருமாறு இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, சுகாதார பணியின் அவசியம் கருதி திருக்கோயில்களை சுற்றியும், வாகனங்களை நிறுத்துமிடத்திலும் 31.12.2019 மற்றும் 01.01.2020 ஆகிய தினங்களில் தேவையான தற்காலிக கழிப்பிடங்களை வாடகை அடிப்படையில் அமைக்கும் பணியினை மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. | பணியின் விபரம் | தேவைப்படும் | விலைப்புள்ளி பெறப்பட்ட நிறுவனத்தின் விபரம் (ரூபாயில்.) |
|---|---|---|---|

| எண் | | தற்காலிக கழிப்பறைகளின் எண்ணிக்கை | M/s.SK Sanitaz, Plot No.IV, Royal Garden Annex, Goparasanallur, Kattupakkam, Chennai- 600 056. | | M/s.LEO Polymers Enterprises, No.68/1, Shiridi Sai Nagar, 3rd Street, Poonamallee, Chennai-56 | | 3D Environmental Services, No.2A, Bakthavatchalu Nagaraj, 2nd Street, Mathur, Chennai-68. | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Rate / No | Amount (Rs.) | Rate / No | Amount (Rs.) | Rate / No | Amount (Rs.) |
| 1. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீதேவி கருமாரியம்மன் மற்றும் ஸ்ரீவேதபுரிஸ்வரர் திருக்கோயில்களுக்கு அருகில் தற்காலிக கழிப்பிட வாடகை அடிப்படையில் அமர்த்துதல். (பராமரிப்பு ஆட்கள் கூலி உட்பட) | 10 x 1 Days = 10 Nos | 3000.00 / 1 No | 30000.00 | 3600.00 / 1 No | 36000.00 | 3750.00 / 1 No | 37500.00 |
| 2. | Transportation Charges (10 Toilet u Down) | | | 5000.00 | | 6000.00 | | 6000.00 |
| 2. | சரக்கு மற்றும் சேவை வரி (18 %) | | | 6300.00 | | 7560.00 | | 7830.00 |
| | **மொத்தம்** | | | **41300.00** | | **49560.00** | | **51330.00** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/s.SK Sanitaz** நிறுவனத்தரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.954** **நாள்.31.12.2019**

**தீர்மானம் : அ, ஆ (ம) இ மூன்றும் அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.8

இந்நகராட்சி பொறியியல் பிரிவின் கீழ் இயங்கி வரும் குடிநீர் டேங்கர் லாரி எண்.TN 20 D 8685 வாகனத்தில் குடிநீர் டேங்கர் மிகவும் பழுதடைந்தும், குடிநீர் சேமிக்க இயலாமல் தெருக்களில் செல்லும் போது சேதமடைந்த பகுதியின் வழியே கசிந்து பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே, மேற்படி வாகனத்தில் ஏற்பட்டு சேதத்தினை வெல்டிங் வைத்து சீர்செய்ய உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி பெறப்பட்ட நிறுவனத்தின் விபரம் (ரூபாயில்.) | | |
|---|---|---|---|---|
| | | M/s.Udaya Turning and Welding Service, No.349/2, Bypass Service Road, Vanagaram, Chennai - 600095 | M/s.Om Sakthi Fabricators, No.19, Mahatma Gandhi Street, East Ayanambakkam, Chennai-600095 | M/s.M.K Industrial, No.1/4, Elango Nagar, 2nd Street, Padi, Chennai- 600050. |
| | | Amount (Rs.) | Amount (Rs.) | Amount (Rs.) |
| 1. | TN 20 D 8685 வாகனத்தில் ஏற்பட்டுள்ள சேதமடைந்த பகுதியினை வெல்டிங் செய்தல் | 26400.00 | 27500.00 | 30500.00 |
| 2. | சரக்கு மற்றும் சேவை வரி (18 %) | 3168.00 | 4950.00 | 5490.00 |
| | **மொத்தம்** | **29568.00** | **32450.00** | **35990.00** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/s.Udaya Turning and Welding Service,** நிறுவனத்தரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.955 நாள்.31.12.2019**

**தீர்மானம் : அ, ஆ, இ அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.9

இந்நகராட்சியில் குடிநீர் திட்டம் ஏதுமில்லாத காரணத்தினால், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள சில இடங்களில் குடிநீர் தரம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் கோலடி ஏரி பகுதியின் அருகே அமைக்கப்பட்டுள்ளஆழ்துளை குழாய் கிணற்றிலிருந்து நகராட்சிக்கு சொந்தமான 4 குடிநீர் லாரிகள் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கோடைக்காலங்களில் குடிநீர் தட்டுப்பாட்டு அதிகரிக்கும் நிலையிலும், அவ்வப்போது நகராட்சி குடிநீர் லாரிகளின் வருடாந்திர தகுதிகாண் சான்று பெறும் காலங்களில் வாகனங்களை பழுது பார்க்கும் காலங்களில் வாகனங்களை இயக்க முடியாத நிலையுள்ளது. எனவே, எதிர்வரும் கோடைக்காலத்தில் குடிநீர் ஆதாரம் நல்ல நிலையில் இல்லாத பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தடையின்றி தனியார் லாரிகளை வாடகை அடிப்படையில் அமர்த்திக்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) எதிர்வரும் கோடை காலத்தில் குடிநீர் தட்டுபாடு நிலவுவதை தடுக்க மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
ஆ) மேற்கண்ட பணியினை வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீட்டினை எதிர்நோக்கியும், தற்போது பணியின் அவசியம் கருதி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும், நிதி ஒதுக்கீடு பெற்ற பின் ஈடுசெய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.956 நாள்.31.12.2019**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.10**

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் தேக்கமடைந்து பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பாக கையாள போரா பிளாஸ்டிக் கோணிப்பைகளில் அடைத்து பாதுகாப்பாக எடுத்துச்செல்ல கோணிப்பைகள் நாள் ஒன்றுக்கு 500 முதல் 750 தேவைப்படுவதாக இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரின் குறிப்பில் தெரிவித்துள்ளார் மேலும் தற்போது நகராட்சியில் கோணிப்பைகள் சப்ளை செய்யும் நிறுவனமான J.J எண்டாபிரைசஸ் நிறுவனத்தின் பணிக்கலாம் டிசம்பர் 31.12.2019 உடன் முடிவடைவதால் தற்போது ஊரக பகுதிகளில் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ளதாலும், ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் இல்லாததாலும் பொது சுகாதார பணிகள் அவசியத்தினை கருதி, பொது சுகாதாரம் பணியில் தொய்வு ஏற்படாமல் இருக்க போரா பிளாஸ்டிக் கோணிப்பைகள் சப்ளை செய்யும் நிறுவனத்திற்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டத்தின் அடிப்படையில் போரா பிளாஸ்டிக் கோணிப்பைகள் விநியோகம் செய்யும் நிறுவனத்திற்கு ஜனவரி முதல் மார்ச் முடிய 3 மாத காலத்திற்கு அதேவிலை விகிதப்படி சப்ளை செய்யவும் அதற்கான பணி உத்திரவு வழங்கவும் இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.957 நாள்.31.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

**பொருள் எண்.11**

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரகுடில்களில் சேகரம் செய்யப்படுகிறது. மேற்படி பசுமை உரக்குடில்களில் மக்கும் மற்றும் மக்காத என தரம் பிரித்து மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளை அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை அரக்கோணம், நாவலூர் மற்றும் ரெட்ஹில்ஸ் ஆகிய பகுதிகளுக்கு தனியார் நிறுவனங்களில் திரவப்பொருளாக பயன்படுத்தப்படுவதால் மேற்படி நிறுவனங்களுக்கு எடுத்து செல்லப்படுகிறது. மேலும் பசுமை உரக்குடிகளில் துர்நாற்றம் வீசமால் இருக்க பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், உரம் தயாரிக்கப்படும் இயந்திரங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்கு உடன் சரிசெய்யவும், பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனகளிடமிருந்து விலைப்புள்ளி கோரவும் பணிகள் மேற்கொள்ள இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.3.00/— இலட்சத்திற்கு பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.958 நாள்.31.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## <u>பொருள் எண்.12</u>

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. அவ்வாறு சேகரம் செய்யப்படும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத தன்மை கொண்டவை என தரம் பிரிக்கப்படுகிறது. மேலும் சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் தன்மை கொண்டவைகளை நேரடியாக முதல் நிலை சேகரிப்பு நிலையிலேயே இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரக்குடில்களில் உரம் தயாரிக்கப்படுகிறது, மேலும் அப்பசுமை உரகுடிலில்களில் துர்நாற்றம் வீசாமல் இருக்கவும், தொற்று நோய்கள் பரவாமல் இருக்கவும் மேலும் பொதுக் கழிப்பறைகளில் துர்நாற்றம் வீசாமல் தடுக்கவும் **டியோடிசின்** எனும் கிருமி நாசினியை அக்குப்பைகளில் தெளிக்க தேவையான அளவில் வாங்கி உபயோகப்படுத்தவும் இதற்கான தோராய செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கும் மேற்படி **டியோடிசின்** நாசினியை ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கிக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது நிதியின் கீழ் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.959 நாள்.31.12.2019**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## <u>பொருள் எண்.13</u>

திருவேற்காடு நகராட்சியில் 18 வார்டுகள் உள்ளது. மேற்படி நகராட்சி பகுதிகளில் குப்பைகள் மக்கும் மற்றம் மக்காத குப்பைகள் என தனித்னியாக பிரிக்க ஏதுவாக பெரிய தரைவிரிப்புகளில் (படுதாக்கள்), தனித்தனியாக சேகரம் செய்ய தேவைப்படுகிறது. மேலும் குப்பைகளை பிரித்து கையாளுவதற்கு பணியாளர்களுக்கு முககவசம் மற்றும் கையுறை தேவைப்படுகிறது. நகராட்சியில் ஈரக்கழிவுகள் சேகரிக்கப்படுவதால் அதை கையாளுவதில் பணியாளர்களுக்கு மிகவும் சிரமமாகயுள்ளது. இந்நகராட்சியில் 33 பேட்டரி வாகனங்கள், 44 டிரைசைக்கிள்கள், 9 இலகுரக வாகனங்கள் மற்றும் 5 டிராக்டர்கள் பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனங்க்ளின் சேகரிக்கப்படும் குப்பைகளை தனித்தனியாக பிரித்து கையாளுவதற்கு தரைவிரிப்புகள் (படுதாக்கள்) மற்றும் பணியாளர்களுக்கு தேவையான முககவசம் மற்றும் கையுறை வாங்கிக்கொள்ளவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.4.50 இலட்சத்திற்கும், அதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மேற்படி செலவீனத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.960 நாள்.31.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## <u>பொருள் எண்.14</u>

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரகுடில்களில் சேகரம் செய்யப்படுகிறது. மேற்படி பசுமை உரக்குடில்களில் மக்கும் மற்றும் மக்காத என தரம் பிரித்து மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளை போரா கோணிப்பைகளில் அடைத்துவைக்க அக்குப்பைகளிலிருந்து துர்நாற்றம் வீசாமல் இருக்க பசுமை உரகுடில்களில் பிரிக்கப்படும்

கழிவுகள் தனித்தனியாக பின்களில் சேகரித்து வைக்க பின்கள் தேவைப்படுகிறது. மேலும் பசுமை உரக்குடில்களில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.3.50/– இலட்சத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.961** **நாள்.31.12.2019**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

**தனி அலுவலர் / ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**